**அக்டோபர் – 12**

# TNPSC துளிகள்

- மத்தியப் புலனாய்வுப் பிரிவானது (CBI), சர்வதேச இணையவெளி சார்ந்த நிதிக் குற்றங்களை இலக்காகக் கொண்ட சர்வதேச காவல் துறையின் HAECHI-VI நடவடிக்கையில் எட்டு முக்கியச் செயல்பாட்டாளர்களை கைது செய்து சந்தேகத்திற்கிடமான 45 நபர்களை அடையாளம் கண்டுள்ளது.
- ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) இயக்கும் NPCI (இந்திய தேசியக் கொடுப்பனவு கழகம்) ஆனது PayPal நிறுவனத்துடன் ஒருங்கிணைந்த முதல் பண வழங்கீட்டு அமைப்பு சார் பங்குதாரராக மாறியுள்ளது.
- 1932 ஆம் ஆண்டில் இந்திய விமானப்படை நிறுவப்பட்டதைக் குறிக்கும் வகையில், 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆம் தேதியன்று இந்தியா அதன் 93வது விமானப்படை தினத்தைக் கொண்டாடியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உலகளாவிய புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாடு 2025




- 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலகளாவிய புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாடு (TNGSS) ஆனது கோவையில் நடத்தப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் 2,032 ஆக இருந்த தமிழ்நாட்டின் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டில் 12,000க்கும் அதிகமாக உயர்ந்தது.
- இந்த சூழல் அமைப்பின் மதிப்பு ஆனது, 3 பில்லியன் டாலரிலிருந்து 27.4 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- இந்த உச்சி மாநாட்டை தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புதுமை திட்ட அமைப்பு (StartupTN) ஏற்பாடு செய்தது.
- ஸ்டார்ட்அப்TN நிறுவனமானது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பங்கு தாரர்களுடனான இணைப்பு, நிகழ்வுப் பட்டியல்கள் மற்றும் தனிப் பயனாக்கப் பட்ட வலையமைப்புக் கருவிகளுடன் TNGSS செயலியை அறிமுகப்படுத்தியது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, 'Disrupt to Rise' என்பதாகும்.

## புத்தொழில் நிறுவனங்களின் சூழல் அமைப்பிற்கான கூட்டு உருவாக்க நிதி




- கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகளாவிய புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாட்டில் தமிழக முதல்வர் 100 கோடி ரூபாய் அளவிலான கூட்டு உருவாக்க நிதியை அறிவித்தார்.
- இந்த நிதியை தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புதுமைத் திட்டம் (StartupTN) நிர்வகிக்கும்.
- இது தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்ககளை ஆதரிக்கும் துணிகர மூலதன நிதிகளில் முதலீடு செய்யும்.
- நடப்பு நிதியாண்டில் இந்தக் கூட்டு உருவாக்க நிதிக்காக 20 கோடி ரூபாய் பிரத்தியேக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2020 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) தளத்தில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 36 சதவீத கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் பதிவானது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, தமிழ்நாட்டில் 2,032 ஆக இருந்த DPIIT துறையினால் அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 12,000 ஆக ஆறு மடங்கு அதிகரித்துள்ளது, அவற்றில் பாதி பெண்கள் தலைமையில் இயங்குகின்றன.
- 2018 ஆம் ஆண்டில், புத்தொழில் நிறுவனங்களின் உள்கட்டமைப்பில் தமிழ்நாடு மிகக் குறைந்த தரவரிசையில் இருந்தது, ஆனால் 2022 ஆம் ஆண்டில் இந்திய மாநிலங்களுள் முதலிடத்திற்கு உயர்ந்தது.
- Inc42 நிறுவனத்தின் படி, தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களால் திரட்டப்பட்ட சராசரி முதலீடு ஆனது 2016 ஆம் ஆண்டில் 1 மில்லியன் டாலரில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 6 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

## பாரம்பரிய ஆணையம் உருவாக்கம்

- நான்கு வாரங்களுக்குள் தமிழ்நாடு பாரம்பரிய ஆணையத்தினை (TNHC) நிறுவ சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசிற்கு உத்தரவிட்டுள்ளது.
- 12 ஆண்டு கால தாமதத்திற்குப் பிறகு, 2024 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று TNHC சட்டம் அமலுக்கு வந்த போதிலும், அந்த ஆணையம் இன்னும் அமைக்கப்படவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

- தேசிய அல்லது மாநிலத் தொல்பொருள் சட்டங்களின் கீழ் வராத பாரம்பரியக் கட்டிடங்களைப் பாதுகாப்பதற்காக இந்த ஆணையம் உருவாக்கப்பட உள்ளது.
- இந்து சமய மற்றும் அறநிலைய (HR&CE) துறை மேற்கொள்ளும் கோயில் கட்டுமான நடவடிக்கைகளை நிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.




## வருவாய் துறை தினம் - ஜூலை 01





- தமிழ்நாடு அரசானது, பசலி ஆண்டின் முதல் நாளான ஜூலை 01 ஆம் தேதியை 'வருவாய்த் துறை தினம்' ஆக நியமித்துள்ளது.
- பசலி என்பது கிரிகோரியன் நாட்காட்டியில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 01 ஆம் தேதியன்று தொடங்கும் ஒரு பாரம்பரிய வேளாண் நாட்காட்டி அமைப்பாகும்.

- இது நில வருவாய், கிராம பதிவுகளைப் புதுப்பித்தல், ஜமாபந்தி நிகழ்வுகள் மற்றும் பயிர் தணிக்கை அறிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- முகலாயர் காலத்தில் உருவான பசலி அமைப்பு ஆனது, காலனித்துவ நிர்வாகிகளால் தக்க வைக்கப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## ஃபுடலா ஏரி வழக்கு




- ஃபுடலா ஏரி தொடர்பான மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்திய உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- ஃபுடலா ஏரி ஆனது குடிநீர் மற்றும் நீர்ப்பாசனத்திற்காக கட்டமைக்கப்பட்ட மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு நீர்நிலை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 2017 ஆம் ஆண்டு ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் 2(1)(g) வது விதியின் கீழ் இந்த ஏரி ஈரநிலமாக தகுதி பெறவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.
- 21வது சரத்தின் கீழ் பொது நம்பிக்கை மற்றும் ஆரோக்கியமானச் சூழலுக்கான அரசியலமைப்பு உரிமையின் கோட்பாட்டை இந்தத் தீர்ப்பு வலியுறுத்தியது.
- தெலுங்கெடி குளம் என்றும் அழைக்கப்படும் மகாராஷ்டிராவின் ஃபுடலா ஏரியானது , 1799 ஆம் ஆண்டு அப்போதைய நாக்பூரின் ஆட்சியாளரால் அப்பகுதியின் நீர்ப்பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 200 ஹெக்டேர் நீர்ப்பிடிப்புப் பகுதியுடன் கட்டமைக்கப்பட்டது.

## மருந்து உரிமத்திற்கான ONDLS

- 18 மாநில மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையங்களானது, மருந்து உரிம செயலாக்கத்திற்காக இயங்கலை வழி தேசிய மருந்து உரிம முறையை (ONDLS) ஏற்று உள்ளன.
- எந்த மாநில அரசும், திருத்தம் மற்றும் தடுப்பு நடவடிக்கை (CAPA) வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றவில்லை.

- ONDLS மற்றும் CAPA ஆகிய இரண்டும், இந்தியாவின் மருந்து உற்பத்தி விதிமுறைகளைப் புதுப்பிக்கின்ற மத்திய அரசின் திருத்தப்பட்ட M அட்டவணையின் கீழ் உள்ள விதிகள் ஆகும்.
- CAPA என்பது மருந்து உற்பத்தியில் உள்ள சிக்கல்களை விசாரித்து தடுப்பதில் கவனம் செலுத்தும் ஒரு தர மேலாண்மை முறையாகும்.
- ONDLS என்பது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் மருந்து உரிமத்தை நெறிப்படுத்துவதற்கும் தரப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் ஒற்றை சாளரத் தளமாகும்.
- 5,308 MSME மருந்து நிறுவனங்களில், 3,838 நிறுவனங்கள் ஆனது திருத்தப்பட்ட அட்டவணை M சார்ந்த முறையான உற்பத்தி நடைமுறைகளுக்கு (GMP) இணங்கி உள்ளன.




## ஒரு தேசம், ஒரு நிலப் பதிவு




- 'ஒரு தேசம், ஒரு நிலப் பதிவு' முன்னெடுப்பானது, இந்தியாவில் உள்ள அனைத்து நகர்ப்புற நிலப் பகுதிகளையும் டிஜிட்டல் முறையில் வரைபடமாக்கி அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஒரு சோதனைத் திட்டமான நக்சா திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

- நக்சா மேம்படுத்தப் பட்ட புவியியல் வரைபடமாக்கல், உலகளாவிய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பு மற்றும் வலை தளப் புவியிட தகவல் அமைப்பு கருவிகளைப் பயன்படுத்துகிறது.
- இந்த சோதனைத் திட்டம் ஆனது 28 மாநிலங்கள் மற்றும் 3 ஒன்றியப் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

## e-NAM வசதியில் புதிய பொருட்கள்

- தேசிய வேளாண் சந்தை (e-NAM) தளத்தில் 9 புதிய பொருட்கள் சேர்க்கப் பட்டு உள்ளதுடன், அதில் மொத்த வர்த்தகம் செய்யக் கூடிய பொருட்களின் எண்ணிக்கை 247 ஆக அதிகரித்துள்ளது.
- e-NAM தளத்தினை மேற்பார்வையிடுகின்ற வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறையானது, ஒரு வெளிப்படையான மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த டிஜிட்டல் வர்த்தக தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிதாக சேர்க்கப்பட்ட 9 பொருட்களில் கிரீன் டீ, உலர்த்தப்பட்ட அஸ்வகந்தா வேர்கள், கடுகு எண்ணெய், லாவெண்டர் எண்ணெய், மெந்தா எண்ணெய், தூய ஆலிவ் எண்ணெய், உலர்ந்த லாவெண்டர் பூ, தேநீர் மற்றும் நொய்யல் அரிசி ஆகியவை அடங்கும்.




# சர்வதேசச் செய்திகள்


## 7வது மாஸ்கோ ஒழுங்கமைவு சந்திப்பு

- 7வது மாஸ்கோ ஒழுங்கமைவுச் சந்திப்பானது ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் நடைபெற்றது.
- தாலிபான் அதிகாரிகள் முதல் முறையாக அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளாக இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

- இந்த நிகழ்வின் பங்கேற்பாளர்கள் சுதந்திரமான, ஒருங்கிணைந்த மற்றும் அமைதியான ஆப்கானிஸ்தானுக்கான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினர்.
- இந்தக் கூட்டத்தின் கூட்டு அறிக்கையானது, ஆப்கானிஸ்தான் அல்லது அண்டை நாடுகளில் வெளிநாட்டு இராணுவ உள்கட்டமைப்பைப் பயன்படுத்துவதை நிராகரித்தது.
- இது இந்தியா, ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.



## ஐரோப்பிய ஒன்றிய நுழைவு/வெளியேறும் முறையின் அமலாக்கம்





- நுழைவு/வெளியேறும் முறை (EES) ஆனது ஷெங்கன் பகுதி எல்லைகளில் தொடங்க உள்ளது.
- EUS அல்லாத மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத தடையற்ற வர்த்தக சங்கம் (EFTA) ஆனது, குறுகிய கால பயணிகளுக்கான எல்லை சரிபார்ப்பு சோதனைகளை தானியங்குபடுத்துகிறது.
- இது நேரடி கடவுச்சீட்டு முத்திரையிடலுக்கு மாற்றாக தனிப்பட்ட மற்றும் பயோமெட்ரிக் தரவுகளின் டிஜிட்டல் பதிவினை அமல்படுத்துகிறது.
- இதன் முழுமையான செயலாக்கப் பணிகள் ஆனது 29 ஷெங்கன் நாடுகளிலும் 2026

ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதிக்குள் நிறைவடையும்.

## 8வது சர்வதேச சூரிய சக்தி கூட்டணி சபை

- 8வது சர்வதேச சூரிய சக்தி கூட்டணி (ISA) சபையானது புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- இந்த சபையானது, முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யும், சவால்களை நிவர்த்தி செய்யும் மற்றும் மலிவு விலையிலான சூரிய சக்தி அணுகலுக்கான முன்னெடுப்புகளை ஒருங்கிணைக்கும்.
- இந்தியா தனது மொத்த மின்சார உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தைப் புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து பெறுவதற்கான அதன் இலக்கு ஆண்டினை விட முன்னதாகவே அந்த இலக்கை அடைந்துள்ளது.
- இந்தியா உலகின் மூன்றாவது பெரிய சூரிய சக்தி உற்பத்தியாளர் மற்றும் இரண்டாவது பெரிய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி சந்தையாகும்.
- பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் யோஜனாவின் கீழ் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மேற்கூரையில் சூரிய சக்தி நிறுவல்கள் நிறுவப்பட்டுள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## உயிரியளவியல் வழியான UPI அங்கீகாரம்

- இந்தியத் தேசிய கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது, UPI கட்டணங்களுக்கான உயிரியளவியல் மற்றும் அணியக்கூடிய வகையிலான கண்ணாடி வழியிலான அங்கீகார வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த புதிய அமைப்பு ஆனது, பயனர்கள் ஆதாரில் சேமிக்கப்பட்ட முக அங்கீகாரம் அல்லது கைரேகைகளைப் பயன்படுத்தி பரிவர்த்தனைகளை அங்கீகரிக்க அனுமதிக்கிறது.

- பயனர்கள் வழக்கமான UPI PIN எண் உள்ளிடாமல், இணக்கமான சாதனங்கள் மூலம் பணம் செலுத்துவதை அங்கீகரிக்கலாம்.
- அணியக் கூடிய ஸ்மார்ட் கண்ணாடி வசதியானது, குரல் வழிக் கட்டளைகள் மற்றும் QR குறியீடு ஸ்கேனிங் மூலம் எளிதான சிறிய மதிப்புப் பரிவர்த்தனைகளை செயல்படுத்துகிறது.
- இந்த முன்னெடுப்புகள் ஆனது இந்தியா முழுவதும் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் டிஜிட்டல் கட்டணங்களை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஒளிராத மின்மினிப் பூச்சி இனங்கள்




- லாமெல்லிபால்போட்ஸ் குறும்பா மற்றும் லாமெல்லிபால்போட்ஸ் டெப்பிரசாமா ஆகிய இரண்டு புதிய ஒளிராத மின்மினிப் பூச்சி இனங்களானது நீலகிரி மாவட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- தற்போது ஐந்து இந்தியாவில் பதிவாகியுள்ளதுடன், இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, அறியப் பட்ட லாமெல்லிபால்போட்ஸ் இனங்களின் மொத்த எண்ணிக்கையை 14 ஆக அதிகரிக்கிறது.
- நீலகிரியின் பல்லுயிரியலைப் பாதுகாப்பதில் அவர்களின் பங்கிற்காகப் பழங்குடி

இனமான குறும்ப பழங்குடியினரின் நினைவாக அவற்றிற்கு லாமெல்லிபால்போட்ஸ் குறும்பா எனப் பெயரிடப்பட்டது.

- ஆராய்ச்சியாளர்கள் அர்னோப் சக்ரோவர்டி மற்றும் பனானி பட்டாச்சார்ஜி ஆகியோரின் பெற்றோருக்குக் கௌரமளிக்கும் விதமாக லாமெல்லிபால்போட்ஸ் டெப்பிரசாமா எனப் பெயரிடப்பட்டது.
- லாமெல்லிபால்போட்ஸ் இனத்தில் இந்தியா, மியான்மர், நேபாளம் மற்றும் தாய்லாந்து முழுவதும் காணப்படும் ஒளிராத மின்மினிப் பூச்சிகள் அடங்கும்.

## நெசோலின்க்ஸ் பனாபிடனே

- சென்ட்ரல் பூங்கா, சால்ட் ஏரி மற்றும் கொல்கத்தா ஆகிய பகுதிகளில் நெசோலின்க்ஸ் பனாபிடனே என்ற புதிய வகை குளவி கண்டறியப்பட்டுள்ளது.
- யூலோஃபிடே குடும்பத்தைச் சேர்ந்த இந்தக் குளவி ஒரு ஹைப்பர்பராசிட்டாய்டு ஆகும்.
- இது சரோப்ஸ் ஆதித்யா எனப்படும் மற்றொரு ஒட்டுண்ணிக் குளவியை ஒட்டு உண்ணியாகக் கொண்டுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் பாதுகாப்பான நகரம்


- கொல்கத்தா நான்காவது ஆண்டாக இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக திகழ்கிறது.
- 2023 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 83.9 குற்றங்கள் பதிவாகியுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில் 103.5 ஆக இருந்த கொல்கத்தாவின் குற்ற விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 83.9 ஆகக் குறைந்துள்ளது.
- கொச்சி, டெல்லி மற்றும் சூரத் ஆகியவை மிகவும் பாதுகாப்பற்ற நகரங்களில்

ஒன்றாகும்.

- இந்த நகரங்களில் சராசரி குற்ற விகிதம் 2023 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 828 ஆக இருந்தது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் கொல்கத்தாவில் 94.7 சதவீதம் என்ற அதிக குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் விகிதம் உள்ளது.




## ஆரவல்லி மலைகளுக்கான புதிய வரையறை




- ஆரவல்லி மலைகளை புவியியல் காலம் மற்றும் 100 மீட்டர் என்ற குறைந்தபட்ச உயரம் கொண்டது என்று வரையறுக்க ஹரியானா அரசு பரிந்துரைக்கிறது.
- பாலியோபுரோடெரோசோயிக் (2.5–1.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) மற்றும் மீசோ புரோடெரோசோயிக் (1.7–1 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) சகாப்தங்களைச் சேர்ந்த மலைகள் மட்டுமே இதற்கு தகுதி பெறும்.
- இது சமீபத்திய நியோபுரோடெரோசோயிக் பாறைகள் மற்றும் 100 மீட்டருக்கும் குறைவான சிறிய மலைகளை இதிலிருந்து விலக்குகிறது.

### நவி மும்பை சர்வதேச விமான நிலையம்

- பிரதமர் நவி மும்பை சர்வதேச விமான நிலையத்தின் முதல் கட்ட செயல்பாடுகளைத் தொடங்கி வைத்தார்.
- இந்த விமான நிலையமானது மகாராஷ்டிராவின் விவசாயிகளை ஐரோப்பா மற்றும் மத்தியக் கிழக்கில் உள்ள உலகளாவிய சந்தைகளுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விமான நிலையமானது ஒரு தானியங்கி மக்கள் இயக்க இணைப்பு முனையங்களைக் கொண்டுள்ளது மற்றும் நீர்வழி வாடகை வாகனச் சேவை மூலம் இணைக்கப்பட்ட இந்தியாவில் முதல் இடமாகவும் இருக்கும்.
- உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையான இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு பெரிய பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் சீராக்க மையமாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## முக்கிய தினங்கள்

### தேசிய அஞ்சல் வாரம் 2025 - அக்டோபர் 6/10

- இத்தினம் மக்களை இணைப்பதிலும் மேம்பாட்டினை ஆதரிப்பதிலும் இந்திய அஞ்சல் துறையின் பங்கைக் கொண்டாடுகிறது.
- இந்தியாவில் முதல் நவீன அஞ்சல் அமைப்பு ஆனது 1854 ஆம் ஆண்டில் டல்ஹௌசி பிரபுவின் ஆளுகையின் கீழ் தொடங்கியது.
- தேசிய அஞ்சல் வாரம் ஆனது அக்டோபர் 09 ஆம் தேதியன்று, 1874 ஆம் ஆண்டில் உலகளாவிய அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்டதைக் குறிக்கின்ற உலக அஞ்சல் தினத்துடன் ஒன்றி தொடங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Post for People: Local Service. Global Reach" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## அபிதம்ம திவாஸ் 2025




- இத்தினத்திற்கான கொண்டாட்டங்கள் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 06 முதல் 07 ஆம் தேதி வரை நடைபெற்றன.
- சர்வதேசப் பௌத்த கூட்டமைப்பு ஆனது, கௌதம புத்தர் பல்கலைக்கழகம் மற்றும் கலாச்சார அமைச்சகத்துடன் இணைந்து, கிரேட்டர் நொய்டாவில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தது.
- "The Relevance of Abhidhamma in Understanding Buddhist Thought" என்ற கருத்துருவினை மையமாகக் கொண்ட ஒரு சர்வதேச மாநாடும் நடைபெற்றது.
- இந்திய அரசு ஆனது பாலி மொழியை ஒரு செம்மொழியாக அங்கீகரித்து, அபிதம்ம

பீடகம் உள்ளிட்ட பௌத்த நூல்களில் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

## துர்கியேயில் மனித முகம் கொண்ட தூண்




- தென்கிழக்கு துருக்கியில் உள்ள கரஹந்தேப்பில் 12,000 ஆண்டுகள் பழமையான மனித முகம் கொண்ட T-வடிவ தூண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது Tas Tepeler (கல் மேடுகள்) தொல்பொருள் திட்டத்தின் ஒரு பகுதியாக கண்டறியப்பட்டது.
- தெளிவாக செதுக்கப்பட்ட மனித முகத்தைக் கொண்ட முதல் அறியப்பட்ட T-வடிவ தூண் இதுவாகும்.
- இந்த T-வடிவ தூண்கள் மனித உருவங்களைக் குறிப்பதாகவும், புதிய கற்காலத்தைச் சேர்ந்தவையாகவும் நம்பப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★